# 46வது ஆண்டறிக்கை (2015 - 2016)



## அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி

**(தன்னாட்சி) தேசியதர மறுமதிப்பீடு "A" அந்தஸ்து பெற்றது**

(கொடைக்கானல், அன்னைதெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது).

**சின்னக்கலையம்புத்தூர், பழனி – 624615.**

# அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி)

தேசியதர மறுமதிப்பீடு "A" அந்தஸ்து பெற்றது

(கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது).
சின்னக்கலையம்புத்தூர், பழனி – 624615.

## 46வது கல்லூரி ஆண்டறிக்கை (2015-2016)

**"என்றும் துணையாய் இகபரங்கள் தாங்குவதும்,
ஒன்றும் குறையாது ஒளிர்வதுவும் - நன்றுணர்ந்தோர்
கொண்டாடிப் போற்றுவதும், கோலம் பொலிபழனித்
தண்டாயுதபாணி தாள்"**

**- பழனித் திருவாயிரம்.**

தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமியின் அருள்கொடையின் கீழ் செயல்படும் நம் கல்லூரி, கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டு, எழில்மிகு பக்தித்தளமாகவும், சுற்றுலாத்தளமாகவும் விளங்கும் பழனி நகரின் மேற்கே கம்பீரமாக தோற்றம் அளிக்கும் நம் கல்லூரியின் **46வது ஆண்டு விழாவை** முன்னிட்டு நடைபெறுகின்ற 2015- 2016 ம் கல்வியாண்டிற்கான கல்லூரி ஆண்டு விழாவில் ஆண்டறிக்கை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

- **1970**ஆம் ஆண்டில் **150** மாணவியர் மற்றும் **10** ஆசிரியர்களுடன் துவங்கப்பட்ட இக்கல்லூரியில் இன்று 2551 கிராமப்புற பின்தங்கிய மாணவிகள் பட்டப்படிப்பு மேற்கொண்டு பயன்பெற்று வருகின்றார்கள். இன்று
    - **ஆசிரியர்கள்** 54
    - **அலுவலர்கள்** 12
    - **உதவி ஆசிரியர்கள்** 6
    - **மணிநேர அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்கள்** 7
    - **அடிப்படைப் பணியாளர்கள்** 7 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

## சுயநிதிப்பிரிவு

- **ஆசிரியர்கள்** 15
- **மணிநேர அடிப்படையில் பணிபுரியும் ஆசிரியர்கள்** 24
- **அலுவலர்கள்** 7
- **அடிப்படைப் பணியாளர்கள்** 7 பேர் பணிபுரிந்து வருகிறார்கள்.

# ‘A’ தரம் - தன்னாட்சிக் கல்லூரி

- நம் கல்லூரி பெண்கல்வி, மகளிர் மேம்பாடு, பெண் தற்சார்பு, நற்குடிமகள் எனும் நோக்கத்துடன் தொடர்ந்து கல்விச் சேவை செய்து வருகின்றது. 16.10.2002 முதல் கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- கல்லூரித் தேசியத்தர மறுமதிப்பீட்டுக் குழு (NAAC) 16.09.2011 முதல் 'A' அந்தஸ்து கொடுத்து தரம் உயர்த்தியது குறிப்பிடத்தக்கது.

# கல்லூரி ஆட்சிமன்ற குழு உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | **தலைவர்** | : | **திரு.M. வீரசண்முகமணி, இ.ஆ.ப. அவர்கள்,**<br>ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,<br>சென்னை -34. |
| 2. | உறுப்பினர் | : | **திரு.இரா.ஞானசேகர் அவர்கள்,**<br>கூடுதல் ஆணையர் (பொது)<br>இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 34. |
| 3. | உறுப்பினர் | : | **திரு.ஆர்.சுதர்சன் அவர்கள்,**<br>இணை ஆணையர் (கல்வி மற்றும் தொண்டு நிறுவனங்கள்)<br>இந்து சமய அறநிலையத்துறை, சென்னை - 34. |
| 4. | உறுப்பினர் | : | **திரு.இர.பச்சையப்பன் அவர்கள்,**<br>இணை ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை,<br>மதுரை மண்டலம், மதுரை. |
| 5. | **தாளாளர்** | : | **திரு.க.இராஜமாணிக்கம் அவர்கள்,**<br>இணை ஆணையர்/ நிர்வாக அதிகாரி/தக்கார்<br>அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்,<br>பழனி. |
| 6. | **செயலர்** | : | **திருமதி.இரா.மேனகா அவர்கள்,**<br>செயலர் ,<br>அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி,<br>பழனி. |
| 7. | உறுப்பினர் | : | **கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்கள்,**<br>மதுரை மண்டலம், மதுரை - 20. |
| 8. | உறுப்பினர் | : | **முனைவர்.திருமதி.க.தேமொழி அவர்கள்,**<br>கல்லூரி முதல்வர், ஆட்சிக்குழு உறுப்பினர்,<br>அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி,<br>பழனி. |
| 9. | **பல்கலைக்கழகப் பிரதிநிதி** | : | **முனைவர்.(திருமதி).என்.கீதா அவர்கள்,**<br>பேராசிரியர், ஆங்கிலத்துறைத்தலைவர்,<br>அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்,<br>கொடைக்கானல். |
| 10. | உறுப்பினர் | : | **திரு.சி.தர்மராஜூ அவர்கள்,**<br>கண்காணிப்பாளர்,<br>அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி,<br>பழனி. |

## கற்பிக்கப்பெறும் பாடப்பிரிவுகள்

| | | |
|---|---|---|
| இளநிலை வகுப்புகள் | : | (B.A., B.Sc., B.Com.,)<br>தமிழ், ஆங்கிலம், வரலாறு, பொருளாதாரம், வணிகவியல், கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல். |
| முதுநிலை வகுப்புகள் | : | (M.A., M.Sc.,)<br>தமிழ், வரலாறு, விலங்கியல் |

### சுயநிதி வகுப்புகள்

| | | |
|---|---|---|
| இளநிலை வகுப்புகள் | : | (B.A., B.Sc., B.C.A.,)<br>தமிழ், ஆங்கிலம், கணிப்பொறித்துறை, பி.சி.ஏ., வணிகவியல் கணினி பயன்பாடுகள். |
| முதுநிலை வகுப்புகள் | : | (M.A., M.Sc., M.Com.,)<br>வணிகவியல் கணினி பயன்பாடுகள், ஆங்கிலம், கணினி அறிவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் |
| உயராய்வு மையங்கள் | : | (M.Phil.,)<br>தமிழ், ஆங்கிலம், வரலாறு, வணிகவியல் |

## நூலகத் துறை

- **நூல்கள் இருப்பு விவரம் - 37057**
- **மாத வார நாளிதழ்கள் - 50**
- **PROJECTS - 402**
- **MINI PROJECTS - 188**
- **ஆய்வுக்கான நூல்கள் - 1800**
- **குறுந்தகடுகள் - 144**
- **BACK VOLUMES - 1200**
- **DAILIES - 8**

## E - RESOURCES:

- **E-BOOKS - 300000**
- **E-JOURNALS - 6000**

# தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம்

## தேர்ச்சி விகிதம்

இளங்கலைத் தமிழ் (B.A Tamil) - 100%

முதுகலைத் தமிழ் (M.A Tamil) - 100%

## சுயநிதிப்பிரிவு

இளங்கலைத் தமிழ் (B.A Tamil) - 100%

ஆய்வியல் நிறைஞர் (M.Phil) - 100%

## தமிழ் மன்றம்

1. 12.02.2015 அன்று, "பன்னாட்டுக் கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவில் காந்திகிராமம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர்.P.ஆனந்தகுமார் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.
2. 12.02.2015 அன்று, "தமிழ் இலக்கியத்தில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் குறுகல்" என்னும் தலைப்பில் உலக அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவில் சித்தூர், அரசு கலைக்கல்லூரியைச் சேர்ந்த தமிழ்ப்பேராசிரியர் முனைவர் P.முருகன், பாண்டிச்சேரி, சுப்ரமணியப் பாரதியார் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர். அறிவுநம்பி, மலேசியா, சுல்தான் அப்துல் அலீம் ஆசிரியர் கல்வி அறக்கட்டளையைச் சேர்ந்த முனைவர்.குமரேசன் ராமய்யா மற்றும் மலேசியா ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.
3. 12.02.2015 அன்று, "தமிழ் இலக்கியத்தில் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் குறுகல்" என்னும் தலைப்பில் உலக அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவில் மதுரை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் மண்டல மேலாளர் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர்.யு.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.
4. 15.04.2015 அன்று "நோக்கு" தொல்காப்பிய புறத்திணைக் கோட்பாடுகள் என்னும் தலைப்பில் தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இவ்விழாவில் சித்தூர், அரசு கலைக்கல்லூரியைச் சேர்ந்த தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.K.உமாமகேஸ்வரி மற்றும் உடுமலைப்பேட்டை , அரசுக்கலைக்கல்லூரியைச் சேர்ந்த தமிழ்த்துறை பேராசிரியர். முனைவர்.M.மதியழகன் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.
5. 21.12.2015 அன்று "தமிழ் இலக்கியத்தின் இன்றையப் பணி" என்னும் தலைப்பில் தேசிய அளவிலான கருத்துப்பட்டறை நடைபெற்றது. இவ்விழாவில் பாண்டிச்சேரி, காஞ்சி மாமுனிவர் ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர்.R.நிர்மலா மற்றும் மதுரை அமெரிக்கன் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர்.A.சோமசுந்தரம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினார்கள்.

## தமிழ் இலக்கிய மன்றம்

1. 05.02.2016 அன்று, "தமிழ் இலக்கியத்தில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு" என்னும் தலைப்பில் பொள்ளாச்சி, என்.ஜி.எம் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர்.மு.ஜெயன் அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

## ஆசிரியர்கள் பங்கேற்பு

### முனைவர்.C.வாசுகி

1. 26.08.2015 அன்று, பொள்ளாச்சி, என்.ஜி.எம் கல்லூரியில் நடைபெற்ற "செவ்வியல் நூல்களில் அளவைகள்"(நடப்பியல் பயன்பாட்டில் வட்டார வழக்கு அளவை முறைகள்) என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
2. 31.12.2015 அன்று, உடுமலைப்பேட்டை, அரசுக்கலைக்கல்லூரியில் நடைபெற்ற "திருமந்திர உரையாசிரியர்களின் உரைத்திறன் " என்னும் வாய்மொழித் தேர்வில் கலந்து கொண்டார்.
3. 19.12.2015 அன்று, பொள்ளாச்சி, சரஸ்வதி தியாகராஜர் கலைக்கல்லூாயில் நடைபெற்ற "சிறப்பு பேச்சாளர்" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
4. 05.03.2016 அன்று, பொள்ளாச்சி.என்.ஜி.எம் கல்லூரியில் நடைபெற்ற "பாடத்திட்ட வடிவமைப்புக் குழுக் கூட்டம் முதன்மை உறுப்பினர்"
5. 23.03.2016 அன்று, திருச்சி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற வாய்மொழித்தேர்வில் "சித்தர் மரபும் காரைச்சித்தரின் கனகவைப்பும்" முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வு புறத்தேர்வாளர்
6. 22.01.2016 அன்று, மருதுபாண்டியன் கல்லூரியில் நடைபெற்ற "நாவலர் நமு.வேங்கடசாமி நாட்டார் அவர்களின் கட்டுரைகளில் சமூக நோக்கு" என்னும் தலைப்பில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

### முனைவர்.P.சத்யா

1. 26.08.2015 அன்று பொள்ளாச்சி, என்.ஜி.எம் கல்லூரியில் நடைபெற்ற "செவ்வியல் நூல்களில் அளவைகள் (எண்ணல், நிறைத்தல், முகத்தல், நீட்டல், கால அளவைகள்) என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.
2. 03.12.2015 அன்று பாலக்காடு, சித்தூர், அரசுக்கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் "புலம்பெயர்வு இலக்கியங்களின் அண்மைப் போக்குகள்" என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.
3. 08.03.2016அன்று கிணத்துக்கடவு எஸ்.வி.எஸ் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற "மகளிர் தினச் சிறப்புரை (காலந்தோறும் மகளிர் மேம்பாடு)
4. 24.03.2016 அன்று சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய உலக அளவிலான கருத்தரங்கில் "ஈழத் தமிழ்ப்பெண் கவிஞர்களின் படைப்புவெளி சிறப்புரை என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

### முனைவர்.பொ.சுதாராணி

1. 02.09.2015 அன்று மதுரை, சிவகாசி நாடார்கள் பயோனியர் மீனாட்சி பெண்கள் கல்லூரியில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் நடைபெற்ற "தமிழ் இலக்கியங்களில் திறனாய்வுப் போக்குகள்"

2. நவம்பர் 2015 அன்று மதுரை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற பன்னாட்டுக் கருத்தரங்கில் "புலம் பெயர் தமிழ் இலக்கியங்களில் திறனாய்வு"
3. 23.03.2016 அன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய தேசிய அளவிலான கருத்தரங்கில் "தமிழ் கற்பித்தல் நெறிமுறைகள்"
4. 24.03.2016 அன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில் "அயலகத் தமிழ்க் கவிதைகளில் பெண்ணியம்" போன்ற நிகழ்வுகளில் பங்குபெற்று சிறப்பித்துள்ளர்.

**மாணவியர் பங்கேற்பு**

1. 09.02.2015 அன்று திண்டுக்கல்லில் நடைபெற்ற தடகளப் போட்டியில் தமிழ்த்துறையைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவி R.ரேகா மூன்றாம் பரிசு பெற்றார்.
2. 07.03.2015, 08.03.2015 அன்று திருச்சியில் நடைபெற்ற கபாடிப் போட்டியில் தமிழ்த்துறையைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவி R.ரேகா இரண்டாம் பரிசு ரூ.3000/- பெற்றார்.
3. 27.03.2015 முதல் 29.03.2015 அன்று மதுரைவாயில் சென்னையில் தென்மண்டல அளவிலான கபாடி போட்டியில் தமிழ்த்துறையைச் சேர்ந்த இரண்டாம் ஆண்டு மாணவி R.ரேகா முதல் பரிசு ரூ.5000/- பெற்றார்.
4. 03.07.2015 மற்றும் 04.07.2015 அன்று தஞ்சாவூரில் நடைபெற்ற மாநில அளவிலான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ் முதல் பரிசு ரூ.25000/- பெற்றார்.
5. 17.07.2015 முதல் 19.07.2015 மதுரையில் பல்கலைக்கழகங்களுக்கிடையேயான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ் ரூ.90,000 பெற்றார்.
6. 01.09.2015 திண்டுக்கலில் நடைபெற்ற மாநில அளவிலான தடகளப் போட்டியில் குண்டு எறிதலில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ் இரண்டாம் பரிசாகப் பதக்கம் பெற்றார். இரண்டாமாண்டு தமிழ் M.மோனிஷா ஈட்டி எறிதலில் இரண்டாம் இடம் பெற்றார்.
7. 03.10.2015 முதல் 04.10.2015 வரை கும்பகோணத்தில் நடைபெற்ற மாநில அளவிலான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஒவ்வொருவரும் ரூ.2500/- பரிசாகப் பெற்றனர்.
8. 18.09.2015 முதல் 20.09.2015 வரை சிவகாசியில் நடைபெற்ற மாநில அளவிலான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு பதக்கம், கோப்பை, மிக்ஸி பரிசாகப் பெற்றனர்.
9. 14.10.2015 முதல் 15.10.2015 திண்டுக்கல் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அன்னை தெரசா பல்கலைக் கழகங்களுக்கிடையேயான தடகளப் போட்டியில் ஆ.மோனிஷா இரண்டாமாண்டு தமிழ் ஈட்டி எறிதலில் இரண்டாமிடமும் தட்டு எறிதலில் நான்காமிடமும் பெற்றார்.
10. 17.12.2015 முதல 23.12.2015 பட்டியாலா பஞ்சாப் மாநிலங்களுக்கிடையேயான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டனர்.
11. 26.12.2015 முதல் 29.12.2015 கன்னியாகுமரி மாவட்டம் மூலச்செல்லில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.40,000/-ரொக்கப்பரிசாகப் பெற்றனர்.

12. 09.01.2016 முதல் 10.01.2016 வரை காரைக்குடியில் நடைபெற்ற மாநில அளவிலான கபாடிப் போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.20,000/- ரொக்கப்பரிசாகப் பெற்றனர்.
13. 14.01.2016 முதல் 17.01.2016 வரை திருச்செங்கோட்டில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான கபாடி போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.40,000/- பரிசாகப் பெற்றனர்.
14. 24.01.2016 முதல் 26.01.2016 வரை மதுரை எம்.ஜி.ஆர் மையத்தில் நடைபெற்ற அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகங்களுக்கிடையேயான கபாடிப் போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.1,20,000/- பரிசாகப் பெற்றனர்.
15. 29.01.2016 முதல் 31.01.2016 வரை ஒசூரில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான கபாடிப் போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.20,000/- பரிசாகப் பெற்றனர்.
16. 10.02.2016 முதல் 12.02.2016 வரை மதுரையில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான கபாடிப் போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.50,000/- பரிசாகப் பெற்றனர்.
17. 15.02.2016 முதல் 16.02.2016 பெரம்பலூரில் முதலமைச்சர் கோப்பைக்காக நடைபெற்ற கபாடிப் போட்டியில் R.ரேகா மூன்றாமாண்டு தமிழ், B.சித்ரா முதலாமாண்டு தமிழ் மற்றும் R.கோமதி முதலாமாண்டு தமிழ் ஆகியோர் கலந்து கொண்டு ரூ.50,000/- மற்றும் கோப்பைப் பரிசாகப் பெற்றனர்.

## ஆங்கிலத்துறை உயராய்வு மையம்

### தேர்ச்சி விகிதம்

**Aided**

இளங்கலை ஆங்கிலம் **(B.A English)** - 100%

**SF**

இளங்கலை ஆங்கிலம் **(B.A English)** - 100%

முதுகலைஆங்கிலம் **(M.A English)** - 100%

ஆய்வியல் நிறைஞர் **(M.Phil)** - 100%

# ஆங்கில இலக்கிய மன்றம்

1. 17.08.2015 அன்று நடைபெற்ற ஒரு நாள் கருத்துப்பட்டறையில் துபாய் பிரிட்டிஷ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனைவர்.சோலமன் அருள்ராஜ் டேவிட் (Conducting Scientific Research in Humanities") என்னும் தலைப்பிலும் மற்றும் "Techniques and Typs of Research" என்னும் தலைப்பிலும் சிறப்புரையாற்றினார்.
2. 15.09.2015 அன்று மாநில அளவிலான கருத்தரங்கில் "South Assian Literature" என்னும் தலைப்பில் உடுமலைப்பேட்டை அரசுக்கலைக்கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் K.சிந்தாமணி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.
3. 12.10.2015 அன்று மதுரை, அமெரிக்கன் கல்லூரி முனைவர்.G.டொமினிக் சேவியோ என்பவர் "Conducting Research and the Mechanics of Writing" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
4. 14.10.2015 அன்று நடைபெற்ற ஒரு நாள் கருத்துப்பட்டறையில "Jounalism and Mass Comunication" என்னும் தலைப்பில் "The Hindu Groups" மதுரையைச் சேர்ந்த திரு.G.சதீஸ்குமார் கலந்து கொண்டு உரையாற்றினார்.
5. 08.01.2016 அன்று நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் கொடைக்கானல் , கிருஸ்டின் காலேஜ் துணை முதல்வர் பேராசிரியர்சு.நெடுமாறன் "Soft Skills" என்னும் தலைப்பிலும் , உடுமலைப்பேட்டை அரசுக் கலைக் கல்லூரி உதவிப்பேராசிரியர்.முனைவர்.V.N.மஞ்சுளா "Communication Skills ''என்னும் தலைப்பிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.
6. 29.01.2016 அன்று நடைபெற்ற கல்லூரி அளவிலான Rainbow —— 2016 தனி நடிப்பு, நாடகம், மற்றும் வினாடி வினா கலந்துரையாடல் இலக்கிய அட்டவணை ஆகிய போட்டிகளில் மகாராணி கலைக்கல்லூரி , தாராபுரம், ஜெயராஜ் அன்னபாக்கியம் கலைக்கல்லூரி, பெரியகுளம், St.Antony's College கலைக்கல்லூரி, திண்டுக்கல் அய்யாநாடார் ஜானகியம்மாள் கல்லூரி சிவகாசி. சக்தி கலைக்கல்லூரி, ஒட்டன்சத்திரம் Bishop கலைக்கல்லூரி, தாராபுரம், Rev Jacob கிறிஸ்டியின் கலைக்கல்லூரி அம்பிளிக்கை, அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பழனி. காந்திகிராமம் கிராமபுற பல்கலைக்கழகம், காந்திகிராமம், ஜி.டி.என் கலைக்கல்லூரி திண்டுக்கல், என்.ஜி.எம் கலை மற்றும் அறிவியல் கலைக் கல்லூரி பொள்ளாச்சி, அய்யாநாடார் ஜானகியம்மாள் கல்லூரி, சிவகாசி ஆகிய போட்டிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டன.
7. 19.02.2016 அன்று தியாகராஜர் கல்லூரியை சேர்ந்த முனைவர் . பேராசிரியர் G.பானுமதி அவர்கள் "Women's Writers and Therouists in English" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
8. 21.06.2015 அன்று , மதுரையில் நடைபெற்ற உலக அளவிலான யோகா தினம், மற்றும் தேசிய மாணவியர் படையினர் "Guninness Book of World Racords" என்னும் தலைப்பில் பங்கு கொண்டனர்.
9. 17.07.2015 மற்றும் 19.07.2015 என்னும் தேதிகளில் மாநில அளவிலான மதுரை எம்.ஜி.ஆர் விளையாட்டு அரங்கில் கபாடி போட்டியில் நம் கல்லூரியைச் சேர்ந்த மூன்றாம் ஆண்டு மாணவி T.Marieswari இரண்டாம் ஆண்டு மாணவி M.அருள்மொழி மாணவிகள் ரூ.90,000 ரொக்கப்பரிசும்ரூ.7500 காசோலையும் பெற்றனர்.

10. 02.09.2015 அன்று சிவகாசி, ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரியில் நடைபெற்ற **"Indian writing in English"** என்னும் தலைப்பில் பங்கு கொண்டு மூன்றாம் ஆண்டு மாணவி திவ்யாபாரதி , ராஜலட்சுமி , மீனாட்சி , N.கலையரசி , M. நிவேதா M.ராஜமாதங்கிஆகிய மாணவிகள் பங்கு கொண்டு பரிசுகளும் பெற்றனர்.
11. 19.09.2015 முதல் 20.09.2015 வரை ஒட்டன்சத்திரம், கிறிஸ்துவ பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான ஜூடோ போட்டியில்( 57 கிலோ) சாம்பியன்ஷிப்பில் முதலாமாண்டு மாணவி U.S.உலகம்மாள் ஜீவிதா மூன்றாம் இடம் பெற்றார்.
12. 22.09.2015 அன்று சிவகாசியில் நடைபெற்ற 21 மாணவிகள் பங்கு கொண்டு **"Club and Lions"** என்னும் தலைப்பில் கண் தானம் முகாம் நடைபெற்றது.
13. 26.09.2015 அன்று மதுரை, தியாகராஜர் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் **"A Review of Paradoxes"** என்னும் தலைப்பில் மாணவ மாணவிகள் பங்கு கொண்டனர்.
14. 07.01.2016 அன்று மாநில அளவிலான ஒரு நாள் போட்டியில் (ஓவியம் மற்றும் ஆங்கில எழுத்துபிழை) மாணவ மாணவிகள் பங்கு கொண்டு பரிசுகள் பெற்றனர்.
15. 30.01.2016 பழனி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் நடைபெற்ற **"III World Literature"** என்னும் தலைப்பில் மாணவிகள் பங்கு கொண்டனர்.
16. 06.02.2016 அன்று மதுரை, தியாகராஜா கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் "MANNAR FEST -2016" என்னும் தலைப்பில் ஓவிய போட்டியில் P.B ஜனனி எனும் மாணவி மூன்றாம் பரிசும், வினாடி வினாவில் M.Rajamadhangi மூன்றாம் பரிசும் A.Alagunatchi இரண்டாம் ஆண்டு முதுகலை மாணவியும், L.lakshmi , A.Maheswari மற்றும் P.Kokilavani ஆகிய மாணவிகள் முதல் பரிசை பெற்றனர்.
17. 08.03.2016 அன்று T.Marieswari மூன்றாம் ஆண்டு மாணவி மத்திய இரயில்வே துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளார்.

## ஆசிரியர்கள் பங்கேற்பு

### திருமதி. பா.செல்வி

1. 17.07.2015 அன்று, உடுமலை, வித்யாசாகர் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாள் தேசிய அளவிலான கருத்தரங்கில் **'Skill in English'** என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
2. 01.10.2015 அன்று, திண்டுக்கல், Jacob Memborial Christian கலைக்கல்லூரியில் நடைபெற்ற **'Skill Scaling'** என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.
3. 30.12.2015 அன்று, பழனி, அருள்மிகு பழனியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் நடைபெற்ற **"Presentation Skills"** என்னும் தலைப்பில் கட்டுரை வாசித்தார்.

### முனைவர்(திருமதி).C.பிரியா

1. 11.02.2016 அன்று, பெரியகுளம், ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் **'Sexyak Issues in Ruth Prawer Jhanvala"** என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.

**திருமதி.V.ஜோதிமணி**

1. 11.02.2016 அன்று, பெரியகுளம், ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் **'Violence in Ngugi wa Thiong'o's Weep not child "** என்னும் தலைப்பில் புத்தகம் வெளியிட்டார்.

**மாணவியர்களின் பங்கேற்பு**

1. 27.08.2016 அன்று, மதுரை, பாத்திமா கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான **'SPRINGS** – 2016' போட்டிகள் **"ஒரு வார்த்தை ஒரு யுகம்"** போட்டியில் முதலாமாண்டு ஆங்கிலத்துறை மாணவிகள் D.உலகம்மாள் ஜீவிதா, T. பிரியதர்சினி ஆகியோர் முதல் பரிசைப் பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார்கள்.
2. 14.10.2016 - T. மகேஸ்வரி என்னும் ஆங்கிலத் துறை மாணவி கபடி போட்டியில் சிறப்பாகப் பங்கேற்றதனால் **Cental Railways** நிறுவனத்தில் கபடி பயிற்சியாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

## வரலாற்றுத்துறை உயராய்வு மையம்

## தேர்ச்சி விகிதம்

இளங்கலை **(B.A History)** - 99.5%
முதுகலை (**M.A History)** - 100%

### சுயநிதிப்பிரிவு

ஆய்வியல் நிறைஞர் **(M.Phil)** - 100%

## கருத்தரங்குகள்

1. 11.09.2015 முதல்வர் (திருமதி) G.தேமொழி அவர்கள் வரலாற்றுத்துறை மாணவியருக்கு வழிகாட்டலும் அறிவுரைத்தலும்" என்ற தலைப்பிலும் 14.03.016 அன்று சொற்பொழிவாற்றினார்கள்.
2. 02.02.2016 அன்று, முனைவர் (திருமதி) S.கிருஷ்ணம்மாள் இணைப்பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் (வி.வி.வி கல்லூரி, விருதுநகர்) அவர்கள் "பெண்களின் பிரச்சனைகளும் பெண்களின் மேம்பாடும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.
3. 09.02.216 அன்று "வரலாற்றின் பன்முகத் தன்மை" என்ற தலைப்பில் மாநில அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் முனைவர் (திரு).மகாலிங்கம், இணைப்பேராசிரியர் (மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மதுரை) அவர்கள் "இந்திய கட்டிடக்கலையின் பரிணாம வளர்ச்சி" என்ற தலைப்பிலும் முனைவர்.திரு.செந்தூர்பாண்டியன் இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, கோவை அரசு கலைக்கல்லூரி,கோயம்புத்தூர் அவர்கள் "மறக்கப்பட்ட சுதந்திர பேராட்டத் தலைவர்கள்" என்ற தலைப்பிலும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.
4. பல்கலைக் கழக மான்யக்குழு உதவியுடன் " மனித உரிமைகள் சான்றிதழ்" படிப்பு 6 மாத வகுப்புகள் இரண்டு முறை நடத்தப்பட்டு 220 மாணவியர் பங்கு கொண்டு பயன் பெற்றனர். சான்றிதழ் வகுப்பு சார்பாக ஊட்டி, கோத்தகிரி ஆகிய பகுதிகளுக்கு ஆசிரியர்கள், மாணவியர்கள் கள ஆய்வு மேற்கொண்டு கோத்தர்கள் , இருளர் ஆகிய பழங்குடியினரின் பிரச்சனைகள் குறித்து ஆய்வு செய்தும, பெண்கள் உரிமைகள் பற்றி ஆய்வு செய்தும் மூன்று செயல்திட்ட ஆய்வறிக்கை சமர்ப்பித்துள்ளனர்.

5. எமது துறை சார்பாக ஆல்பம் தயாரித்தல் மற்றும் நடனப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.
6. 12.08.2015 அன்று , அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்திலிருந்து வரலாற்றுத் துறையை உயராய்வு புலமாக உயர்த்துதற்கான உயராய்வுக் குழு வருகை புரிந்தது. 08.10.2015 அன்று உயராய்வு புலமாக அறிவிக்கப்பட்டது.

## ஆசிரியர்கள் பங்கேற்பு

### முனைவர்(திருமதி).க.கல்யாணசுந்தரி

1. 31.1.15 அன்று, "இந்திய சுதந்திரப் பேராட்டத்தில் பெண்கள்" என்ற தலைப்பில் விருதுநகர் V.V.V வன்னியப் பெருமாள் கல்லூரியில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள்.
2. 15.08.2015 அன்று, நமது கல்லூரியில் நடைபெற்ற சுதந்திரப் தின விழாவில் சுதந்திரப் போராட்ட நிகழ்வுகள் குறித்து உரையாற்றினார்கள்.

### முனைவர்(திருமதி). T.செல்வநாயகி

1. பன்னாட்டு வரலாற்று இதழில் **'Art and Architecture of Veeracholeswara Temple at Kolumam'** என்பது குறித்து ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளார்.

### முனைவர்(திருமதி).L.திலகவதி

1. 12.10.2016 அன்று, ஈரோடு, வெள்ளாளர் கல்லூரியில் நடைபெற்ற முனைவர் பட்ட வாய்மொழித் தேர்வின் புறநிலைத் தேர்வாளராக பணியாற்றியுள்ளார்.

### முனைவர்(திருமதி)S.ஜெயந்திமாலா

1. 10.10.2016 அன்று, கொடைக்கானல், அன்னைதெரசா மகளிர்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற MA & M.Phil வாய்மொழித் தேர்வின் நெறியாளராகப் பணிபுரிந்துள்ளார்.

### திருமதி.M.தங்கம்

1. **'A Study of Place Names of Udumalpet Taluk'** என்னும் தலைப்பில் பன்னாட்டு இதழில் கட்டுரை வெளியிட்டுள்ளார். ISSN - 2349 - 8684

## மாணவியர் பங்கேற்பு

1. 18.08.2016 முதல் 20.08.2016 வரை தேனி மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான கபாடி போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு A.தங்கம்மாள், திண்டுக்கல் மாவட்ட அணியில் விளையாண்டு ரூ.12 இலட்சம் பரிசுத் தொகை பெற்று நம்முடைய கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்துள்ளார்.
2. 16.09.2016 முதல் 18.09.2016 வரை இளங்கலை இரண்டாம் ஆண்டு A.தங்கம்மாள் 64 வது தமிழ்நாடு சீனியர் கபாடி போட்டியில் கலந்து கொண்டார். 43 வது தமிழ்நாடு ஜூனியர் போட்டியில் முதலிடம் பெற்றார்.
3. 11.08.2016 மற்றும் 12.08.2016 இரண்டு நாட்கள் நமது கல்லூரியில் நடைபெற்ற பல்கலைக்கழக அளவிலான கபாடி போட்டியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு A.தங்கம்மாள் கலந்து கொண்டு முதலிடம் பெற்றார்.

## வணிகவியல் உயராய்வு மையம்

## தேர்ச்சி விகிதம்

இளங்கலை வணிகவியல் (B.Com) - 79%

இளங்கலை வணிகவியல் மற்றும் கணினி பயன்பாடு (B.Com(C.A) - 96%

## சுயநிதிப்பிரிவு

முதுகலை வணிகவியல் (M.Com (C.A)) - 91%

ஆய்வியல் நிறைஞர் (M.Phil) - 83%

## கருத்தரங்குகள்

1. 17.08.2015 அன்று பழனி, அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியும் , கொடைக்கானல், அன்னைத் தெரசா பல்கலைக்கழகமும் நடத்திய ஒரு நாள் பயிற்சி பட்டறையில் முனைவர்.Solomon David என்பவர் “Techniques and types of Reseach” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
2. 29.09.2015 அன்று, பாண்டிச்சேரி, School of Management தேசிய அளவிலான "Green Computung என்னும் தலைப்பிலும் பொள்ளாச்சி, NGM கல்லூரியைச் சேர்ந்த முனைவர் P.Maruthu Pandian (துறைத்தலைவர்)" Green Marketing prospect and Chanllenges என்னும் தலைப்பில்உரையாற்றினார்.

**வணிகவியல் மன்றம் 2016 -2017**

1. 15.02.2015 அன்று கும்பகோணம், S.K.S.S கலைக்கல்லூரியைச் சேர்ந்த முதல்வர் முனைவர்.S.மோகன் அவர்கள் மாநில அளவிலான ஒரு நாள் பயிற்சி பட்டறையில் "Stock Market Techniques and Practices",என்னும் தலைப்பிலும், பொள்ளாச்சி, ஆடிட்டர் அவர்கள் "Current practices and Techniques of Stock Market" என்னும் தலைப்பிலும் உரையாற்றினார். மேலும் பழனி, ஆடிட்டர். திரு.S.Janarthanan FCA, அவர்கள் வாழ்த்துறை வழங்கினார்.
2. பொள்ளாச்சி, சக்தி கலைக்கல்லூரியைச் சேர்ந்த திரு.முரளிதரன் மற்றும் திரு.பாலாஜி ஆகியோர் "**Facing the Interview**" என்னும் தலைப்பில் உரையாற்றினார்கள்.

## மாணவியர் பங்கேற்பு

1. மதுரையில் நடைபெற்ற தேசிய மாணவர் படை இரண்டாமாண்டு மாணவி S.Guhapirya தேசிய அளவிலான யோகா போட்டிகளில் கலந்து கொண்டார்.
2. இரண்டாம் ஆண்டு T.நிவேதா என்னும் மாணவி சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நடத்திய பேச்சுப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார்.
3. திண்டுக்கல்லில் நடைபெற்ற அருட்பெருஞ்சோதி சன்மார்க்க சங்கம் நடத்திய போட்டிகளில் T.நிவேதா மூன்றாம் இடத்தையும் மற்றும் விவேகானந்தா சிவா டிரஸ்ட் நடத்திய எழுத்துத் தேர்வில் பங்கேற்றார்.

# கணிதவியல் துறை

## தேர்ச்சி விகிதம்

- இளம் அறிவியல் (B.Sc Maths) - 100%

1. **திருமதி.கே.மீனா**

   01.09.2015 அன்று தேசிய அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் "The Impact of Global Crisis on Power Sector Investment என்னும் தலைப்பில் பங்கேற்றார்.

### மாணவியர் பங்கேற்பு

1. 04.10.2015 அன்று, பழனி "Chess Association" யில் நடைபெற்ற மாவட்ட அளவிலான ஒரு நாள் சதுரங்க போட்டியில் II B.Sc G.Mugilya என்னும் மாணவி நான்காம் பரிசை பெற்றார்.
2. 10.09.2015 முதல் 12.09.2015 வரை திண்டுக்கல், M.V.M .B.Ed College யில் நடைபெற்ற S.Mahesh Bhavatharani III B.Sc Mathematics "YRC – Disater Management Training Camp For 3 Days" என்னும் தலைப்பில் கலந்து கொண்டார்.
3. 20.02.2016 அன்று, சென்னை **Red Cross Society** நடைபெற்ற மூன்றாம் ஆண்டு S.Mahesh Bhavatharani என்னும் மாணவி "Oratorical Competition in English on Growth and Development of IT is Boone or Bane By Indian Red cross society" என்னும் தலைப்பில் கலந்து கொண்டார்கள்.
4. 29.02.2015 அன்று, உடுமலை G.V.G கல்லூரியில் நடைபெற்ற மூன்றாம் ஆண்டு S.Mahesh Bhavatharani என்னும் மாணவி "**Recent Advances in Graph Theory**" என்னும் தலைப்பில் கலந்து கொண்டார்.
5. 29.02.2016 அன்று, உடுமலை G.V.G கல்லூரியில் நடைபெற்ற மூன்றாம் ஆண்டு J.Kavitha Sri, T.Lathamani, N.Nandhini போன்ற மாணவிகள் "Recent Advances in Graph Theory" என்னும் தலைப்பில் கலந்து கொண்டார்கள்.
6. 15.10.2015 அன்று, பழனி Elaignar Nala Kazhagam- யில் நடைபெற்ற மூன்றாம் ஆண்டு S.Udhaya Kumari என்னும் மாணவி **"Kavithai Abdulkalam in Ariviyalum Sathaniyuum"** என்னும் தலைப்பில் பங்கு கொண்டார்.
7. 12.01.2016 அன்று, பழனி விவேகானந்தா சேவா மையம் நடத்திய ஒரு நாள் போட்டியில் இரண்டாமாண்டு மாணவி S.Anitha "**National Youth day Competition"** என்னும் தலைப்பில் பரிசை வென்றார்.

# இயற்பியல் துறை

## தேர்ச்சி விகிதம்

இளநிலை இயற்பியல் **(B.Sc Physics) - 100%**

1. 15.02.2016 அன்று, பொள்ளாச்சி NGM கல்லூரியைச் சேர்ந்த முனைவர்.(திரு). Christopher Selvin என்பவர் "Light Emitting Diodes in Modern Life" என்னும் தலைப்பில் கருத்துரையாற்றினார்.

2. 26.02.2016 அன்று ,திருப்பூர் LRG அரசு மகளிர் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த முனைவர் மு.ராஜேந்திரன் என்பவர் ஒரு நாள் கருத்தரங்கில் "**The Role of Sensors in Electronics**" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
3. 26.02.2016 அன்று, ஈரோடு சிவகாசி கல்லூரியைச் சேர்ந்த இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் V.வெற்றிவேல அவர்கள் " **Design Principles in Electronic Circuits**" என்னும் தலைப்பில் கருத்துரையாற்றினார்.

## ஆசிரியர்கள் பங்கேற்பு

**முனைவர்.T.M.செல்வகுமாரி**

06.01.2013 முதல் 12.01.2016 வரை கோயம்புத்தூர் , அவிநாசிலிங்கம் கல்லூரியில் நடைபெற்ற ஒரு நாள் கருத்தரங்கில் பங்கு கொண்டார்.

**மாணவியர் பங்கேற்பு**

1. 29.01. 2016 பழனி அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கில் "**Emerging Trends in Medical Physics**" என்னும் தலைப்பில் மாணவியர்கள் பங்கு கொண்டனர்.
2. 04.02.2016 பெரியகுளம், ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான மாநாட்டில் "**Recent Trends in Physics & Material Research** " என்னும் தலைப்பில் மூன்றாம் ஆண்டு மாணவியர்கள் கலந்து கொண்டனர்.
3. 27.01.16 அன்று, தமிழ் வளர்ச்சி கழகம் நடத்திய கவிதை மற்றும் கட்டுரைப் போட்டியில் இரண்டாமாண்டு மற்றும் முதலாமாண்டு மாணவியர்கள் பங்கேற்றனர்.
4. 04.02.2016அன்று, திண்டுக்கல், ஜி.டி.என். கல்லூரியில் S.திபிகா இரண்டாமாண்டு மாணவி கட்டுரை வாசித்தார், R.சரண்யா S.பாலாம்பிகை கோலப் போட்டியில் மூன்றாம் பரிசு பெற்றனர்.
5. 05.02.2016 அன்று, தமிழ் இலக்கிய மன்றம் நடத்திய கட்டுரை போட்டியில் இரண்டாமாண்டு மாணவி மு.மோனிசா இரண்டாம் பரிசு பெற்றார், பேச்சுப் போட்டியில் இரண்டாமாண்டு மாணவி சு.கௌசல்யா இரண்டாம் பரிசு பெற்றார்.

# வேதியியல் துறை

## தேர்ச்சி விகிதம்

**இளநிலை வேதியியல் (B.Sc Chemistry) – 100%**

## ஆசிரியர்கள் பங்கேற்பு

**திருமதி.M.S. முத்துலட்சுமி**

1. 11.9.2015 அன்று, பொள்ளாச்சியில் , சக்தி சர்க்கரை ஆலை , சோயா மற்றும் பால் பிரிவு மற்றும் "**Recent Trends in Spectroscopy & Polymer Chemistry**" என்ற தலைப்பில் மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கத்தில் பங்கேற்றனர்.

திருமதி.க.அனிதா

1. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியல் துறை நடத்திய **"பெண் உரிமை"** என்னும் தலைப்பில் தேசிய அளவிலான இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்றார்.

2.சிதம்பரம், அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் உயிர் வேதியியல் துறை நடத்திய தேசிய அளவிலான இரண்டு நாள் மாநாட்டில் பங்கேற்றார்.
3. 07.12.2015 அன்று, கோயம்புத்தூரில் உள்ள P.S.G.R கிருஷ்ணம்மாள் மகளிர் கலைக் கல்லூரி நடத்திய சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டனர்.
4. 19.02.2016 அன்று முனைவர்பட்டம் வாய்மொழித் தேர்வை முடித்துள்ளார்.

**மாணவிகளின் பங்கேற்பு**

1. 09.02.2016 அன்று, ஒட்டன்சத்திரம், சக்தி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஆய்வு கட்டுரையை "**Green Chemistry**" என்னும் தலைப்பில் M.காவியா என்ற மாணவி வழங்கினார்.

## வேதியியல் மன்றம்

## Industrial Visit

2. 11.9.2015 அன்று, பொள்ளாச்சியில் , சக்தி சர்க்கரை ஆலை , சோயா மற்றும் பால் பிரிவை 108 மாணவியரும் , 4 ஆசிரியர்களும் பங்கேற்றனர்.
3. 08.1.2016 அன்று "**Recent Trends in Spectroscopy & Polymer Chemistry**" என்ற தலைப்பில் மாநில அளவிலான ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.
4. முனைவர் ரவி (துறைத்தலைவர்) மற்றும் கற்பகம் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் "**Org Spectroscopy**" என்னும் தலைப்பில் உரையாற்றினார்கள்.
5. முனைவர் முருகவேல் இணைப்பேராசிரியர் PSG College of Technology கோயம்புத்தூர் Polymer Chemistry என்னும் தலைப்பில் உரையாற்றினார்.
6. 11.02.2016 அன்று, இத்துறையில் நடைபெற்ற கருத்தரங்கில் Chemistry the basis என்னும் தலைப்பில் முனைவர் S.சிவக்குமார் துறைத்தலைவர் வேதியியல் துறை சிக்கனா அரசு கல்லூரி திருப்பூர் அவர்கள் சிறப்புரையாற்றினார். முனைவர் C.விஸ்வநாதன் உதவிப் பேராசிரியர் வேதியியல் துறை அழகப்பா அரசு கல்லூரி காரைக்குடி அவர்கள் "Electro Analytical Degradation of Pollutants & Biosensors" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

## தாவரவியல் துறை

## தேர்ச்சி விகிதம்

இளநிலை தாவரவியல் **(B.Sc.Botany ) – 100%**

## Department Activities

4. 05.02.2016, 06.02.2016 தாவரவியல் துறை நடத்திய மாநில அளவிலான பயிற்சி பட்டறையில் திரு.மு.குமாரி Subject Matter Specialist (Scientist) காந்திகிராமம்

பல்கலைக்கழகம் , ஆலை நோயியல் துறையை சேர்ந்த கோயம்புத்தூர், முனைவர் A. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் "Agri Business Opportunities for food and medicine through mushrooms" என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

5. 11.02.2016 அன்று கோயம்புத்தூர் அரசு கலைக்கல்லூரியைச் சேர்ந்த முனைவர் மு.காளிமுத்து உதவிப் பேராசிரியர் அவர்கள் விருந்தினர் விரிவுரையாளராக பங்கேற்றார்.

## ஆசிரியர்களின் பங்கேற்பு

### திருமதி.R.பிரேமா

1. 08.09.2015 அன்று, பழனி அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில"Recent Chanllenges in Zoology" வேதியியல் துறை நடத்திய "In Vitro antioxidant potential of methanolic leaf extracts of Pentatrois microphylla" என்னும் தலைப்பில் கட்டுரை வாசித்தார்.
2. 28.09.2015 அன்று , கணிதவியல் துறை நடத்திய தேசிய அளவிலான கருத்தரங்கில் **"Differential Equations in Modellling cell suicide"** என்னும் தலைப்பில் என்னும் தலைப்பில் கட்டுரை வழங்கினார்.
3. 04.02.2016 அன்று, ஒட்டன்சத்திரம், Rev.Jacob Memorial Chrishtian கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் Department of Biochemistry நடத்திய "Botanicals and Phytochemicals the challengesa and promise for health care and drug development" என்னும் தலைப்பில் பங்கேற்றார்.

### திருமதி.V.வனிதா

1. 08.09.2015 அன்று, பழனி அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் "Recent Chanllenges in Zoology" வேதியியல் துறை நடத்திய "Antibacterial and Antifungal Activity of Toddalia asiatica (L) Lam, A Traditional medicinal plant " என்னும் தலைப்பில் பங்கேற்றார்.
2. 04.02.2016 அன்று ,ஒட்டன்சத்திரம், Rev.Jacob Memorial Chrishtian கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் Department of Biochemistry நடத்திய "Evaluation of Anti-Cancer Activity of methanolic eotract of Terminalia chebula fruits in experimental rats" என்னும் தலைப்பில் பங்கேற்றார்.

## மாணவியரின் பங்கேற்பு

1. 11.08.2015 அன்று, திண்டுக்கல் எம்.வி.எம் கல்லூரியில் நடைபெற்ற மூன்றாம் ஆண்டு மாணவியர்கள் G.காயத்ரி , K.பவித்ரா , D.தனலட்சுமி ஆகிய மாணவிகள் எய்ட்ஸ் விழிப்புணர்வு திட்டத்தில் பங்கேற்றனர்.
2. 15.10.2015 அன்று, திண்டுக்கல்லில் நடைபெற்ற அப்துல்கலாம் பிறந்த நாளை முன்னிட்டு நாட்டு நலப்பணித்திட்டம் நடத்திய இரண்டாமாண்டு மாணவிகள் S.வினிதா , K.சந்திரலேகா , E.கார்த்திகா ஆகிய மாணவிகள் Rally ——யில் பங்கேற்றார்கள்.
3. 04.02.2016 அன்று, அம்பிளிக்கை , Rev.Jacob Memorial கல்லூரியில் நடைபெற்ற தேசிய அளவிலான கருத்தரங்கில் சிறந்த சுவரொட்டி போட்டிகளில் மூன்றாமாண்டு மாணவிகள் G.காயத்ரி, K.பவித்ரா , P.சங்கீதா , S.அமர்ஜோதி ஆகிய மாணவிகள் பங்கேற்றனர்.
4. 10.03.2016 அன்று, பொள்ளாச்சி N.G.M கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிளான

ஒரு நாள் கருத்தரங்கில் மூன்றாமாண்டு மாணவிகள் G.காயத்ரி, M.அனிதா , K.பவித்ரா , K.கீதா , P.கல்பனா , P.அருணா, S.துர்க்காதேவி, M.மகாலட்சுமி ஆகிய மாணவிகள் கலந்துக்கொண்டனர்.

5. 4.2.2016 அன்று, அம்பிளிக்கை Rev.Jacob Memorial Christian கல்லூரியில் நடைப்பெற்ற தேசிய அளவிளான ஒரு நாள் கருத்தரங்கில் இரண்டாமாண்டு மாணவிகள் S.கௌதமி, A.மோனிகா ஜோதி ஆகியோர் பங்கேற்றார்கள்.

## கணிப்பொறித்துறை

### தேர்ச்சி விகிதம்

| | |
|---|---|
| **இளநிலை கணினி அறிவியல் (B.Sc (C.S)** | **- 97%** |
| **இளநிலை கணினி பயன்பாட்டுத் துறை (B.C.A)** | **– 100%** |
| **முதுநிலை கணினி அறிவியல் & கணினி தகவல் தொழில் நுட்பம் (M.Sc (C.S & I.T)** | **- 93%** |

## ஆசிரியர்கள் பங்கேற்பு

### முனைவர் (திருமதி)C.ஜெயபாரதி

14.08.2015 அன்று "DHT Based Structured Peer-to-Peer Resource discovery in Grid Computing" என்னும் தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றார்.

### முனைவர்.(திரு) K.குங்குமராஜ்

1. ஜனவரி -2016 அன்று சர்வதேச பத்திரிக்கையில் "Survey on Locality Awareness Request Distribtion in Cluster Based Network Severs" என்னும் தலைப்பிலும், "A Survey on Data Mining With Big Data Application என்னும் தலைப்பிலும் வெளியிட்டார்.

## மாணவியர் பங்கேற்பு

1. திண்டுக்கல் எம்.வி.எம் கல்லூரியில் நடைபெற்ற "**Animation** "போட்டியில் மூன்றாம் மாணவி N.Bhuvaneswrari இரண்டாம் பரிசை பெற்றார்.
2. திண்டுக்கல் எம்.வி.எம் கல்லூரியில் நடைபெற்ற செய்நிரல் உருவாக்க போட்டிகளில் மூன்றாம் ஆண்டு மாணவி S.செல்வராணி மூன்றாம் பரிசை பெற்றார்.

## நாட்டு நலப்பணித்திட்டம் (NSS)

1. 03.07.2015 அன்று, முதலாமாண்டு மாணவியருக்கு நாட்டுநலப் பணித்திட்டம் பற்றி அறிமுக வகுப்பு நடத்தப்பட்டது.
2. 29.07.2015 அன்று, முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல் கலாம் மறைவிற்கு அஞ்சலி செலுத்தும் விதமாக மரம் நடும் விழாவும், அதன் பின் அமைதிப் பேரணியானது நம் கல்லூரியில் தொடங்கி வி.கே. மில்ஸ் வரை கல்லூரி முதல்வரின்

தலைமையில் நடைபெற்றது. இதில் அனைத்துப் பேராசிரியர்கள், மாணவியர் மற்றும் அலுவலக நண்பர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

3. 31.07.2015 டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல் கலாமின் நினைவாக ”ஏவுகணை நாயகன்” என்னும் தலைப்பில் கட்டுரைப் போட்டி நடைபெற்றது. மாணவியர் கலந்து கொண்டனர்.
4. 06.08.2015 கல்லூரி நாட்டு நலப் பணித்திட்ட மாணவியர்களால் கல்லூரி வளாகத்திலும் , கல்லூரியின் அருகில் உள்ள சாலையோரங்களிலும் பிளாஸ்டிக் பைகள் அகற்றப்பட்டது .
5. 07.08.2015 கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணையின்படி வண்ணத்துப்பூச்சி என்னும் விழப்புணர்வு திரைப்படம் நாட்டு நலப்பணித்திட்ட மாணவியர் உதவியுடன் கல்லூரியில் காட்டப்பட்டது.
6. 14.08.2015 அன்று கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணையின்படி தந்தை பெரியார் என்னும் சமுதாய விழிப்புணர்வு திரைப்படம் கல்லூரி மாணவியர் அனைவருக்கும் காட்டப்பட்டது.
7. 14.8.2015 முதல் 15.08.2015 சுதந்திரப் தின விழா ஏற்பாடுகள் கல்லூரி வளாகத் தூய்மை - இருக்கை வசதி செய்தல் மற்றும் பிற பணிகள்.
8. 18.08.2015 அன்று, தாய்ப்பால் விழிப்புணர்வு பேரணியானது கல்லூரி முதல்வர் தலைமையில் சின்னக்கலையம்புத்தூர் பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்றது. மேலும், நம் பாரத பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கல்லூரி வளாகத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் பைகள் அகற்றப்பட்டது.
9. 02.09.215 கல்லூரி பேரவைத் துவக்க விழாவின் காரணமாக இருக்கை வசதி செய்தல் மற்றும் பிற பணிகள். மேலும் அன்னைத் தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தில் நாட்டு நலப்பணித்திட்ட அணிவகுப்பு முகாமிற்கான தேர்வு கொடைக்கானல் அட்டுவம் பட்டியல் நடைபெற்றது. அதில் இரண்டாம் ஆண்டு வரலாற்றுத்துறை மாணவியர் அபிநயா, ஜெயலட்சுமி ஆகிய இருவரும் கலந்து கொண்டனர்.
10. 03.09.2015 கல்லூரி நாட்டு நலப் பணித்திட்ட மாணவியர்களால் கல்லூரி வளாகத்தைச் சுற்றியுள்ள பிளாஸ்டிக் பைகள் அகற்றப்பட்டது.
11. 2.09.2015 பழனி மலைக்கோயில் அரிமா சங்கமும் மற்றும் அரிமா சங்கம் பன்னாட்டு அமைப்பும் இணைந்து நடத்திய கண்தான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் நம் கல்லூரி முதல்வர் வரவேற்புரை நிகழ்த்தவும், அதன் பின் டாக்டர் து.கணேஷ் கண்விழி பற்றிய குறம்படம் காட்டி, மாணவியர்களுக்கு கண்தானம் குறித்த கருத்துக்களை எடுத்து கூறி வினாடி வினா மூலம் விழிப்புணர்வினை ஏற்படுத்தினர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்களால் செய்யப்பட்டது.
12. 25.09.2015 அன்று வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற திட்டத்தின் படி சுகுணா உணவுப் பொருள் அமைப்பு நம் கல்லூரிக்கு 1500 மரக்கன்றுகளை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நம் கல்லூரி முதல்வர் வரவேற்புரை வழங்கவும், அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவில் உதவி ஆணையரும், நம் கல்லூரி செயலருமான திருமதி சு.மேனகா அவர்கள் உரையாற்றினார். அதன்பின் சுகுணா உணவுப் பொருள் பொது மேலாளர் திரு.து.பெரோஸ்கான் சிறப்புரை ஆற்றிய பின் மரக்கன்றுகள் நம் கல்லூரி செயலர் மற்றும் முதல்வரிடம் வழங்கப்பட்டது. பின் அம்மரக் கன்றுகள் அனைத்து மாணவியருக்கும் கொடுக்கப்பட்டது.
13. 29.9.2015 அன்று ஏகன் அமைப்பின் உதவி மேலாளர் திரு.சதீஸ்குமார் உயிர்காக்கும் சிகிச்சை என்ற தலைப்பில் 104 மற்றும் 108 ன் பணிகள் , அதன் பயன்கள்,விபத்தின்

போது செய்யவேண்டிய முதலுதவி முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டம் சத்துள்ள உணவு வகைகள் ஆகியன பற்றி மாணவியருக்கு எடுத்துரைத்தார்.

14. 06.10.2015 கல்லூரி வளாகம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் பைகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டது.
15. 15.10.2015 கல்லூரிக் கல்வி இயக்குநரின் ஆணையின் படி டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் பிறந்த நாளினை இளைஞர் எழுச்சி நாளாகக் கொண்டு பள்ளி கல்லூரி மாணவர்கள் நாட்டு நலப் பணித் தொண்டர்களுடன் இணைந்து இளைஞர் பேரணியானது திண்டுக்கல் மாவட்ட ஆணையர் திரு.ஹிரிஹரன் தலைமையில் திண்டுக்கல் வட்டாச்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் நம் கல்லூரியின் சார்பாக 50 மாணவியரும் மற்றும் நாட்டு நலப் பணித் திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர். மேலும் நம் கல்லூரியில் அப்துல் கலாமின் மேம்பாட்டுச் சிந்தனைகள் என்னும் தலைப்பில் மூன்று மாணவியரின் சிறப்புரைகளும்,கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளும் நடைபெற்றது.
16. 16.10.2015 நம் கல்லூரிக்கு அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் இணை ஆணையர் வழங்கிய 200 மரக்கன்றுகள் கல்லூரி வளாகத்தைச் சுற்றி நாட்டுநலப் பணித்திட்ட மாணவியர்களால் வைக்கப்பட்டது.
17. 20.10.2015 திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு முகாம் திண்டுக்கல் மாவட்ட நலப் பணிகள் இணை இயக்குநர் திருமதி.ரவிகலா அவர்களால் நடத்தப்பட்டது. அதில் நம் கல்லூரியின் சார்பாக வரலாற்றுத்துறைத் தலைவர் இணைப் பேராசிரியர் டாக்டர்.திருமதி. மு.கல்யாணசுந்தரி அவர்களும் மற்றும் பொருளாதாரத் துறைத் தலைவர்,இணைப் பேராசிரியர் டாக்டர் ஜெயபூபதி நீதிமணி அவர்களும் கலந்து கொண்டனர்.
18. 30.10.2015 நம் கல்லூரி நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்கள் டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த கொசுக்கள் பரவும் விதம் பற்றியும், அதனால் வரும் தீமைகளையும் நாட்டு நலப் பணித்திட்ட மாணவியருக்கு எடுத்துக் கூறினார். பின் அம்மாணவியர் அக்கருத்துக்களை பிற மாணவியருக்கும் எடுத்துரைத்தனர்.
19. கல்லூரி வளாகம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் பைகள் மற்றும் குப்பைகள் அகற்றப்பட்டது.
20. 05.01.2015 முதல் 07.01.2016 வரை நம் கல்லூரியின் நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவியர்களால் இக்கல்வியாண்டில் பயிலும் இளங்கலை மற்றும் முதுகலை முதலாம் ஆண்டு மாணவியருக்குப் பொது மருத்துவ பரிசோதனை மேற்கொள்வதற்கான அனைத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டது.
21. 07.01.2016 அன்று கல்லூரி வளாகம் தூய்மை செய்தல்.
22. 22.01.2016 அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் நடைபெற்ற தைப்பூச விழாவின் சிறப்புப் பணியாக, பக்தர்களின் வரிசைகளை ஒழுங்குப்படுத்துதல், தாகத்திற்குக் குடிநீர் வழங்குதல் மற்றும் தைப்பூச நாளன்று பெரிய நாயகி அம்மன் கோவிலில் நடைபெற்ற தேரோட்டத்தில் வடம் பிடித்தல் ஆகிய பணிகள் நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் 100 மாணவியர்களால் செய்யப்பட்டது.
23. 28.01.2016 அன்று சாலை பாதுகாப்பு வாரத்தின் சார்பாக நம் கல்லூரி வழிபாட்டு அரங்கில் கல்லூரி முதல்வர் மற்றும் ஆசிரியர்கள், அலுவலக நண்பர்கள், மாணவியர் அனைவராலும் சாலை பாதுகாப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.
24. 08.02.2016 அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி நாட்டுநலப் பணித்திட்டமும் , பழனி அரசு மருத்துவமனை மற்றும் பாப்பம்பட்டி வட்டார ஆரம்ப சுகாதார நிலையமும் இணைந்து இரத்த தான சிறப்பு முகாம் கல்லூரி விடுதி

வளாகத்தில் நடைபெற்றது. இம் முகாமில் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர், தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் மற்றும் 38 மாணவியர்களால் குருதிக் கொடை வழங்கப்பட்டது.

25. 10.02.2016 முதல் 16.02.2016 அன்று குடற்புழு நீக்க நாள் காரணமாக பழநி அரசு சுகாதார நிலையத்திலிருந்து வழங்கப்பட்ட மாத்திரைகள் நம் கல்லூரியின் அனைத்து துறை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவியருக்கு நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்களால் கொடுக்கப்பட்டது.
26. 19.02.2016 அன்று மதுரை, கண்பார்வையற்றோர் அறக்கட்டளையில் கொடிநாள் சார்பாக அளித்த 1500 கொடிகள் அனைத்து துறை முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவியருக்கு வழங்கப்பட்டது.
27. 24.02.2016 அன்று மாசித் திருவிழாவின் சிறப்புப் பணியாக , பழனி மாரியம்மன் கோயிலில் நடைபெற்ற தேரோட்டத்தில் 100 மாணவியர் வடம் பிடித்தல் பணியினைச் செய்தனர். அவர்களுடன் நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர்.
28. 08.03.2016 நம் கல்லூரி மகளிர் மன்றமும், நாட்டுநலப் பணித்திட்டமும், இளைஞர் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்தப்பட்ட மகளிர் தின விழாவில் கல்லூரி கல்லூரி முதல்வர் தலைமை உரையாற்ற , பழனி பாலாஜி கருத்தரித்தல் மைய நிர்வாக இயக்குநர் டாக்டர்.செந்தாமரைச் செல்வி அவர்களால் உடல் கூறு மாற்றங்கள் மற்றும் மன அழுத்தம் எனப் பல்வேறு பிரச்சனைகளுக்கு கருத்துக்களை வழங்கியதுடன் , பேராசிரியர் மற்றும் மாணவியர் வினவிய சந்தேகங்களுக்கு விளக்கமும் அளிக்கப்பட்டது.
29. 21.03.2016 முதல் 24.03.3016 வரை அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி மலைக்கோயிலில் நடைபெற்ற பங்குனி உத்திர விழாவின் சிறப்புப் பணியாக, பக்தர்களின் வரிசைகளை ஒழுங்குப்படுத்துதல், குடிநீர் கொடுத்தல் ஆகிய பணிகள் 80 மாணவியர்கள் மற்றும் நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்களால் செய்யப்பட்டது.

## உடற்கல்வித்துறை மன்றம்

தமிழ்நாடு அமெச்சூர் கபாடிக் கழகம் சார்பாக 42-வது தமிழ்நாடு மாநில அளவிலான இளையோருக்கான கபாடி சாம்பியன்சிப் - 2015 , 25/09/2015 முதல் 27/09/2015 வரை விருதுநகர் மாவட்ட அமெச்சூர் கபாடிக் கழகம் சார்பாக நடைபெற்றது. இப்போட்டியில் திண்டுக்கல் மாவட்ட கபாடி அணியின் சார்பாக நமது கல்லூரியின் ஆறு மாணவிகள் உள்ளடங்கிய கபாடி அணி பங்குபெற்று முதலிடம் பெற்றது. 32 மாவட்டங்கள் பங்குபெற்ற இப்போட்டியில் இறுதிப்போட்டி, திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாவட்ட அணிகளுக்கிடையே நடைபெற்றது. இறுதிப்போட்டியில் 23-11 என்ற புள்ளிகளில் திண்டுக்கல் மாவட்ட அணி வெற்றி பெற்றது. வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு சான்றிதழ்கள், புத்தகங்கள் , கோப்பைகள் மற்றும் ஒவ்வொருவருக்கும் மிக்சி, தமிழ்நாடு அமெச்சூர் கபாடிக் கழகம் சார்பாக வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இப்போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் வீராங்கனைகள் தேசிய அளவிலான போட்டியில் தமிழ்நாட்டின் சார்பாக விளையாட உள்ளனர்.

1. 20.08.2015 முதல் 21/08/2015 வரை மாநில அளவிலான போட்டியில் ஆர்.ரேகா மூன்றாமாண்டு இளங்கலை தமிழ் மாணவி , எம்.அருள்மொழி இரண்டாமாண்டு

இளங்கலை ஆங்கிலம் மாணவி , ஸ்ரீதேவி இரண்டாமாண்டு இளங்கலை விலங்கில் மாணவி, பி.சித்ரா முதலாமாண்டு இளங்கலை தமிழ் மாணவி, ஆர்.கோமதி முதலாமாண்டு இளங்கலை தமிழ் மாணவி, எ.தங்கம்மாள் முதலாமாண்டு இளங்கலை வரலாறு மாணவியும் பங்கேற்க உள்ளனர்.

2. நமது கல்லூரியில் கபாடி அணி மாணவிகள் 05.06.2015 முதல் 09.06.2015 வரை கிருஷ்ணகிரி மாவட்டம் பொச்சம் பள்ளியில் நடைபெற்ற மாநில அளவிலான கபாடி போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசை பெற்றனர். மற்றும் பரிசுத் தொகையாக 1.5 லட்சம் ரூபாய் பெற்றனர்.
3. 12.06.2015 முதல் 5.06.2015 வரை மணப்பாறையில் நடந்த மாநில அளவிலான கபாடி போட்டியில் கபாடி போட்டியில் நமது கல்லூரி கபாடி மாணவிகள் பங்கேற்று முதல் பரிசை பெற்றனர் மற்றும் 1 லட்சம் ரூபாய் பெற்றனர்.
4. ஒசூரில் 22.06.2015 முதல் 24.06.2015 வரை நடைபெற்ற மாநில அளவிலான கபாடி போட்டியில் நமது கல்லூரா கபாடி அணியினர் பங்கேற்று இரண்டாவது நிலையையும் பரிசுத் தொகையாக 50,000 ரூபாயையும் பெற்றனர்.
5. பா.சித்ரா இளங்கலை தமிழ் முதலாமாண்டு மாணவி திண்டுக்கல் மாவட்ட அளவிலான தடகளப் போட்டியில் கலந்து கொண்டு 400 மீட்டர் ஓட்டத்தில் இரண்டாவது பரிசை வென்றார். மேலும் 18.10.2015 முதல் 19.10.2015 நேரு மைதானம், கோயம்புத்தூரில் நடைபெறவிருந்த மாநில அளவிலான தடகள போட்டியில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டார் .
6. விருதுநகரில் 25.09.2015 முதல் 27.09.2015 வரை 42-வது தமிழ்நாடு இளையோருக்கான மாநில அளவிலான கபாடி போட்டியினை தமிழ்நாடு அமெச்சூர் கழகம் எடுத்து நடத்தியது.
7. பா.சித்ரா -800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் மூன்றாம் மற்றும் 4X100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் க.சந்தியா , த.மாரிஸ்வரி, ர.ரேகா ஆகியோர் பங்கேற்று மூன்றாம் இடத்தைப் பெற்றனர்.
8. 16.10.2015 முதல் 18.10.2015 வரை நேரு மைதானம், கோயமுத்தூரில் இளையோருக்கான மாநில அளவிலான தடகளப் போட்டி நடைபெற்றது. பா.சித்ரா தொடர் ஓட்டத்தில் பங்கேற்று மூன்றாவது பரிசு பெற்றார்.

## வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை மையம்

1. இதன்மூலம் மாணவிகளுக்கு அவர்களின் சுயவிவரங்களை அறியும்பொருட்டு கையேடு வழங்கப்பட்டுள்ளது. பிரதி மாதம் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகலில் துறைகள் தோறும் பேராசிரியர்கள் மாணவியர்களுடன் கலந்துரையாடி சுத்தம் , சுகாதாரம், உளவியல், குடும்பப் பொருளாதாரம் மற்றும் சமுதாய உறவுகள் ஆகியவற்றின் மேம்பாடு குறித்துஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது என இதன் **பொறுப்பு ஆசிரியர்கள் திருமதி இரா.தமிழரசி மற்றும் முனைவர் திருமதி.கி.திருமாத்தாள்** தெரிவித்தார்கள்.

## இளைஞர் நலக் கழகம்

1. நமது கல்லூரி மாணவிகளின் பல்திறன் கலைஅறிவு திறன் சார்ந்த போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## ஆன்மீக மன்றம்

1. திருப்பாவை மற்றும் திருவெம்பாவை ஒப்புவித்தல் போட்டி நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

## மதிப்புக்கல்வி மன்றம் (Value Education)

1. மதிப்புக் கல்வி மன்றம் சார்பாக முதலாமாண்டில் சேரும் மாணவியருக்கு முதல் பருவத்தில் உடற்பயிற்சி, தியானம் மற்றும் காயகல்பபயிற்சி குறித்து கற்றுத்தரப்படுகிறது. பழனி, அறிவுத் திருக்கோவில் அறக்கட்டளை ஆசிரியர் திருமதி.செல்லம்மாள் பயிற்சி அளித்தார்கள்.

# நிறைவுரை

46 - வது கல்லூரி ஆண்டு விழாவில் அன்பும் பண்பும் மிக, ஆன்ற நற்குணங்களோடும் ஒழுங்குணர்வோடும் பயின்று வரும் எமது **மாணவியர்களைப்** பாராட்டி அவர்களுக்கு வாழ்த்துக்கூறிக் கொள்வதோடு மகத்தான ஆசிரியர் பணியாளர்களுக்கும், அலுவலக நண்பர்களுக்கும், பத்திரிக்கை மற்றும் ஊடகத் துறையினருக்கும், திருக்கோவில் நிர்வாகப் பணியாளர்களுக்கும் நன்றியினைக் கூறி ஆண்டறிக்கையினை நிறைவு செய்கின்றேன்.

**நன்றி ! வணக்கம்...**